பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 15 சனிக்கிழமை 31.08.2019 கதிர் 299

**இது ரகசியம் அல்ல!**

பொடி வைத்துப் பேசுவதில் சுமந்திரன் சமர்த்தர்தான். நேற்று ஒரு நிகழ்வில் நாசூக்காக வடக்கு ஆளுநருக்கு அவர் கால் தடம் போட்ட விதத்தை அந்த நிகழ்வில் பங்குபற்றிய ஓர் அன்பர் விவரித்தார்.

பருத்தித்துறை பக்கம் 02 »





# நாடு உருப்பட புதிய அரசமைப்பு அவசியம் என்கிறார் மைத்திரியார்



## இன்னமும் அதற்கு வாய்ப்பு உள்ளதாம் தாமும் முழு அளவில் ஒத்துழைப்பாராம்

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்31

நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமானால் – நாடு உருப்பட வேண்டுமானால் – புதிய அரசமைப்பு நிச்சயமாக உருவாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அதே நேரத்தில் நாட்டைக் குழப்புகின்ற 19 ஆவது திருத்தச் சட்டத்தையும் இல்லாதொழிக்க வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்த்தரப்புக்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அதற்கு இன்னமும் வாய்ப்புகள் உள்ளன. அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்க நான் தயாராக இருக்கிறேன்.

– இப்படி நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்கம் 11 »

## தமிழருக்குத் தந்த வாக்குறுதிகளுக்கு ஜனாதிபதி மைத்திரியின் பதில் என்ன?

### நேற்று யாழ் நகரப் பொது நிகழ்வில் சுமந்திரன் நேரடியாகக் கேள்வி


- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஓக. 31

ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்ட காலத்தில் நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நீங்கள் நிறைவேற்றவில்லை என்ற ஆதங்கம் எங்கள் மக்களிடத்தே இருக்கின்றது. இதே நேரத்தில் இன்னும் குறுகியய கால இடைவெளி இருக்கின்ற போது நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களிடத்தே சிலருக்கு இருக்கின்றது. இந்தவிடயங்களை நான் ஒரு சிறியவனாக அரசியலிலும் எங்கள் கட்சியிலும் இருந்தாலும் மக்களின் மன நிலையில் ஆழமாகப் பதிந்திருக்கின்ற இந்த விடயத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்தி உங்கள் முன்பாக வைத்து பக்கம் 11 »

### சலுகை அரசியலைக் கைவிட்டு தமிழரின் உரிமையை வெல்ல

## தன்னோடு கைகோர்க்குமாறு கோட்டா தமிழ்க் கூட்டமைப்பினருக்கு அழைப்பு!



கொழும்பு,ஓக.31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் சலுகை அரசியலுக்கு அடிபணியாமல் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க எம்முடன் கைகோர்க்கவேண்டும். தமிழ் மக்கள் எம்மை நம்புகின்றார் பக்கம் 02 »

## பருத்தித்துறை மீன்பிடித்துறை அபிவிருத்திப் பணி ஆரம்பம்

### தொடக்கி வைத்தார் ஜனாதிபதி



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 31

பருத்தித்துறை மீன்பிடித்துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று வெள்ளிக் பக்கம் 02 »

### காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு

## ஓமந்தையில் பேரணி!





வவுனியா, ஓக.31

சர்வதேச காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியா, ஓமந்தையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பிள்ளையார் ஆலயத்தின் முன்றிலில் இருந்து ஆரம்பமாகி இராணுவ சோதனைச்சாவடி அமைந்திருந்த ஓமந்தை இறம்பைக்குளம் வரை பொலிஸாரின் கடும் பாதுகாப் பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# சஜித் வாய் வீரர்தான்; செயல் வீரர் அல்லர்!

## ஐ.தே.கவில் எவருக்கும் தகுதியில்லை; இப்படிக் கிண்டலடிக்கின்றார் மஹிந்த

கொழும்பு,ஓக.31

சஜித் பிரேமதாஸ, தந்தையின் பெயரைப் பயன்படுத்தியே தேர்தலில்களமிறங்கத்தீர்மானித்துள்ளார். அவர் செயலில் வீரர் அல்லர். வாய்ச்சொல்லில்தான் வீரர்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்தலைவருமானமஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கியநேர்காணலிலேயேஅவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் ஆட்சியைத் தீர்மானிப்பது இந்த நாட்டில் வாழும் மக்களேயன்றி சர்வதேச சமூகம் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியைப் பல வெளிநாடுகள் இயக்குகின்றன. அதனால் அந்தக் கட்சி சின்னாபின்னமாகச் சிதறுண்டு காணப்படுகின்றது.

ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பெரும்பாடு படுகின்றார். அதே வேளை, ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட அவருக்கும் ஆசை வந்துள்ளது. பல ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்த அவர் மீண்டும் போட்டியிடக் கனவு காண்பது வெட்கக்கேடான விடயம்.

சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராவதற்கு எந்தத் தகுதியும் அற்றவர். தந்தையின் பெயரைப் பயன்படுத்தித்தான் அவர் அரசியலுக்கு வந்தவர். தற்போதும், தந்தையின் பெயரைப் பயன்படுத்தியே தேர்தலில் களமிறங்க அவர் தீர்மானித்துள்ளார். அவர் செயலில் வீரர் அல்லர். வாய்ச்சொல்லில்தான் வீரர்.

அதேவேளை, கரு ஜயசூரியவும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் ஒருவர். கடந்த ஒக்டோபர் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது அமெரிக்கா உள்ளிட்ட பல வெளிநாடுகளின் அழுத்தத்தின் பெயரில்தான் அவர் நாடாளுமன்றத்தில் நடுநிலையாகச் செயற்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாகவே அவர் செயற்படுகின்றார். சபாநாயகர் கதிரையில் அமர்வதற்குத் தகுதியற்ற அவர் ஜனாதிபதிக் கதிரைக்கு வருவது எப்படி நியாயம்?

ஒட்டுமொத்த ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராவதற்கு எவரும் தகுதியற்றவர்கள். இந்த நாட்டில் வாழும் மூவின மக்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபயவை ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்–என்றுகுறிப்பிட்டுள்ளார்.

## தற்கொலைக் குண்டுதாரியின் உடல் பாகங்களை மீளத் தோண்டி எடுக்க மட்டு. நீதிமன்றம் உத்தரவு

மட்டக்களப்பு,ஓக.31

மட்டக்களப்பு, கள்ளியங்காடு பகுதியில் உள்ள இந்து மயானத்தில் புதைக்கப்பட்ட முஸ்லிம் தீவிரவாதத் தற்கொலைக் குண்டுதாரியின் உடல் பாகங்களை எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தோண்டியெடுக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதியின் உடல் பாகங்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் மட்டக்களப்பு, கள்ளியங்காடு பகுதியில் உள்ள இந்து மயானத்தில் புதைக்கப்பட்டன.

இந்தச் செயலுக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து தொடர் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வந்த நிலையில், அந்தக் குண்டுதாரியின் உடற்பாகங்களை அங்கிருந்து மீண்டும் தோண்டி எடுக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில்!

## நீதிமன்றத் தீர்ப்பையடுத்து நடவடிக்கை

இடைநிறுத்தப்பட்டிருந்த எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை உடன் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினால் முன்வைக்கப்பட்டிருந்த வேட்பாளர் பட்டியலையும் ஏற்றுக் கொள்ளுமாறும் உயர் நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவைக் கேட்டுள்ளது.

இதனையடுத்து, எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலுக்குத் தன்னால் முன்வைக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினால் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு மீதான விசாரணை முடியும் வரையில் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடாத்த கூடாது என தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின் பின்னர் உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

### தன்னோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள். எனவே, எம்முடன் கைகோர்க்குமாறு கூட்டமைப்புக்கு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு: –

ஐக்கிய தேசியக் கட்சியை இனியும் தமிழ் மக்கள் நம்பக் கூடாது. ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாத அந்தக் கட்சியா தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கப் போகின்றது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4 ஆண்டுகளாக ரணில் அரசுடன் திரைமறைவில் செய்த நடவடிக்கை எல்லாம் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். தமிழ் மக்கள் சிறுபிள்ளைத்தனமானவர்கள் அல்லர்.

ஜனாதிபதி வேட்பாளராகக் கடந்த 11ஆம் திகதி நான் அறிவிக்கப்பட்டபோது, தமிழ் மக்கள் பெருமளவில் அந்த நிகழ்வில் கலந்துகொண்டார்கள். தமிழ் மக்கள் எம்மை நம்புகின்றார்கள். எனவே, எம்முடன் கைகோர்க்குமாறு கூட்டமைப்புக்குப் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து தேசிய ரீதியில் ஏற்கும் வகையில் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம்.

என் மீது சில தரப்பினர் வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றார்கள். நான் அப்படியான குற்றச்சாட்டுக்கள் எவையும் புரிந்தவன் அல்லன். இந்த நாடு மூவின மக்களுக்கும் சொந்தமானது. மூவின மக்களும் சுதந்திரக் காற்றைச் சுவாசித்து நிம்மதியாக வாழும் சூழ்நிலையை எமது ஆட்சியில் ஏற்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம். எனவே, சிங்கள மக்கள் மட்டுமன்றி தமிழ், முஸ்லிம்களாகிய தமிழ் பேசும் மக்களும் எமக்கு ஆதரவு வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்

– என்று குறிப்பிட்டுள்ளார்.

### இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் தான் இது நடந்தது.

பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பான திட்டம் திடீரென உருவானதல்ல. நீண்ட காலமாக அதற்கான முன்னேற்பாடுகள், தயார்படுத்தல்கள் நடந்து வந்தன.

கடந்த வருடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கே வந்த போது ஒரு முழுநாள் சுமந்திரன் எம்.பியுடன் வடமராச்சியில், குறிப்பாக வடமராட்சி கிழக்கில் செலவிட்டமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம்.

வடமராட்சி கிழக்கை சூழலியல் சுற்றுலாத்தளமாக மாற்றுவது குறித்து மதிப்பீடு செய்வதற்காக வடமராட்சி கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளை சுமந்திரன் எம்.பியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஹெலிக்கொப்டர் ஒன்றில் நீண்ட நேரம் தாழப் பறந்து வட்டமடித்து நோட்டமிட்டமை குறித்தும் அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

அச்சமயத்தில் பருத்தித்துறைத் துறைமுகப் பகுதிக்கும் பிரதமர் நேரில் சென்றிருந்தார். அந்த துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பது குறித்தும் அப்போதும் ஆராயப்பட்டது.

இந்தத் திட்டம் அதற்கு முன்னரே நீண்ட காலமாகத் தயாரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு வருவதுதான்.

ஆனால், இந்த வருட முற்பகுதியில்தான் – சுமார் ஏழரை மாதங்களுக்கு முன்னர் – வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்ற கலாநிதி சுரேன் இராகவன், ஏதோ இந்தத் திட்டம் தான் ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் தன்னால் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் ஒன்று என்பது போல காட்ட முயற்சித்து, 'பந்தா' பண்ணி வருகின்றார் என்று ஒரு கருத்து நிலைப்பாடு நிலவியது. சுமந்திரனுக்கும் அது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதனால் ஆளுநருக்கு தமது உரையில் 'நைஸாக' ஒரு 'ஷொட்' கொடுத்தாராம் சுமந்திரன்.

*“இந்தத் துறைமுக அபிவிருத்திப் பணிகள் நீண்ட காலத்திற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டன. அப்போதிலிருந்தே பல்வேறு குழப்பங்கள் காணப்பட்டன. அவை தொடர்பாகப் பலதடவைகள் பல தரப்புகளுடன் நாம் இங்கு வந்து பேச வேண்டியிருந்தது.*

*“காலத்திற்குக் காலம் பொறுப்பு வகித்த பல கடற்றொழில் அமைச்சர்களும் கூட இந்தத் துறைமுக அபிவிருத்தி விடயத்தில் தெளிவாக இருந்து முன் ஆயத்தங்களைச் செய்திருக்கின்றார்கள்.*

*இப்போது, கடைசி நேரத்திலும் சில பிரச்சினைகள் வந்தன. ஆளுநர் அவற்றில் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார். நான் அவருக்கும் நன்றி கூறுகின்றேன்”* – என்று ஒரு போடு போட்டார் சுமந்திரன்.

★ இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பழைய திட்டம்தான்.

★ கடைசி நேரத்தில்தான் இப்போது இதற்குள் ஆளுநர் நுழைந்திருக்கின்றார். அவர் பந்தா காட்டுவது போல இது அவர் முழுதாகத் தம்பாட்டில் ஆரம்பித்த திட்டமே அல்ல.

★ ஆகையினால் இது விசேடமாகத் தாம் முன்னெடுத்த திட்டம் என்று ஆளுநர் உரிமை கோருவது போல காட்டுவது அர்த்தமற்றது.

– இப்படி பல விடயங்களைத் தமது உரைக்குள் பொடி வைத்துப் பேசியமை மூலம் வெளிப்படுத்தினார் சுமந்திரன். சட்டத்தரணி மூளையல்லவா? இப்படித்தான் அவ்வப்போது பல குசும்புகளைப் புரியும். அது தவிர்க்க முடியாது தான்!

**- மின்னல் -**

### பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை முற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

'மைத்திரி ஆட்சி – நிலையான நாடு மற்றும் பேண்தகு மீன்பிடி கைத்தொழிற் துறையின் ஊடாக மீன்பிடித் துறையில் தெற்காசிய வலயத்தில் முன்னோடியாக திகழ் தல்' எனும் எதிர்கால நோக்கிற்கமைய வடக்கு மீன்பிடித்துறையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் இந்த மீன்பிடித் துறைமுகம் இலங்கையில் இதுவரை நிர்மாணிக்கப்பட்ட மிக விசாலமான மீன்பிடித் துறைமுகமாகும்.

இதற்காக 1260 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெரியளவிலான 300 படகுகளுக்குத் தேவையான வசதிகளை ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய இந்தத் துறைமுகத்தின் இறங்குதுறை 7.1 ஹெக்ரயர் பரப்பளவையும் துறைமுகப் படுக்கை 18.6 ஹெக்ரேயர் பரப்பினையும் கொண்டுள்ளதுடன், 880 மீற்றர் நீளத்தையும் 480 மீற்றர் அகலத்தையும் கொண்டுள்ளது.

உலகிலுள்ள நவீன ரக மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக பயன்படுத்தல், பிடிக்கப்படும் மீன்களைக் கரைசேர்த்தல், எரிபொருள் மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளல், படகுகளை பழுதுபார்த்தல், ஐஸ் மற்றும் குளிர்சாதன வசதிகள், படகுகளுக்கான இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ளல், மீன் விற்பனை, வலை தயாரிப்பு, கடைத்தொகுதி, கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கான வசதிகள், கரையோரப் பாதுகாப்பு சேவைகள், மீன்பிடித்திணைக்கள அதிகாரிகளின் சேவைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் இந்த மீன்பிடித் துறைமுகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

அமைச்சர்கள் பீ.ஹரிசன், அப்துல் ஹலீம், வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் காதர் மஸ்தான், அங்கஜன் ராமநாதன், எம்.ஏ. சுமந்திரன், மாவை சேனாதிராஜா, தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.(ஐ–07)

### ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக மத்தில் போராளியாக வந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஓமந்தை சோதனை சாவடி அமைந்திருந்த பகுதியின் வேலியை அகற்றியவாறு உள்நுழைந்து அங்கு ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி, வடக்கு, கிழக்கில் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டறியும் குடும்பங் களின் சங்கத்தினால் இப்போராட் டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமது பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்த ஓமந்தை சோதனைச் சாவடி அமைந்திருந்த பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவு

பக்கம் 11 »

# "ஆட்சியாளர்களின் மாற்றங்களினால் நாம் கூடக் காணாமற்போகும் நிலை"

## சர்வதேசத்திடம் நீதி கேட்டு கல்முனையில் பேரணி







மட்டக்களப்பு, ஓக. 31

நாம் வீதிகளில் நின்று கத்தும் ஒலி சர்வதேசத்திற்குக் கேட்கவில்லையா? அரசியல் தலைவர்களின் மாற்றங்களினால் நாங்கள்கூட காணாமற்போவதற்குச் சாத்தியகூறுகள் உள்ளன. அரசு மாற முதல் சர்வதேசம் கவனத்தில் கொண்டு எங்கள் உறவுகளை மீட்டுத்தர முயற்சி செய்யவேண்டும். சர்வதேச விசாரணை வேண்டும்

–இவ்வாறு கல்முனையில் இடம் பெற்ற காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பேரணியில் வலியுறுத்தப்பட்டது.

சர்வதேச காணாமற்போனோரின் தினமான நேற்று வெள்ளிக்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் பல்வேறு அமைப்புக்களும் இணைந்து கல்முனையில் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை தரவைப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வழிபாடுகளுடன் ஆரம்பமான வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பேரணி, கல்முனை பிரதான வீதியூடாகச் சென்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் வரை சென்று மனு கையளிக்கப்பட்டது.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் செயலாளர் ரீ.ஜெ.அதிசயராஜ், மனித உரிமை ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஏ.எல். இஸ்ஸதீன் ஆகியோரிடம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் மனு கையளிக்கப் பட்டது.

இந்தப் போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பல்கலைக் கழக மாண வர்கள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் நீதிக்காகக் கலந்துகொண்டார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் தமது ஆதங்கங்களை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தினர் .

10 வருடங்களாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இதுவரை 35 பேருக்கு மேல் எம்மோடு இணைந்து வெயில், பனி, மழை எனப் பாராது தமது உறவுகள் இன்று வருவார் நாளை வருவார் என்ற எதிர்பார்போடு உயிரை விட்டுள்ளார்கள்.

நாம் அரசிடம் நேரடியாக சந்தித்து மனுக் கையளித்தோம், பல போராட்டங்களை முன்னெடுத்தோம் எதற்கும் அரசு செவி சாய்ப்பதாக இல்லை. எமக்கான நீதி அரசு மூலம் கிடைக்கவில்லை.

நாம் வீதிகளில் நின்று கத்தும் ஒலி சர்வதேசத்திற்குக் கேட்கவில்லையா? அரசியல் தலைவர் களின் மாற்றங்களினால் நாங்கள் கூட காணாமற்போவதற்குச் சாத்தியகூறுகள் உள்ளன. அரசு மாற முதல் சர்வதேசம் கவனத்தில் கொண்டு எங்களுடைய உறவுகளை மீட்டுத்தர முயற்சி செய்ய வேண்டும். சர்வதேச விசாரணை வேண்டும். எனப் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வெள்ளைவானில் கொண்டு சென்றவர்கள் எங்கே?, பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும், சர்வதேசமே ஏன் ஊமையாய் இருக்கிறாய், கடத்தப்பட்ட எமது உறவுகள் எங்கே? கையில் கொடுத்த எங்கள் பிள்ளைகள் எங்கே? எம் உறவுகளைக் கொலை செய்தவர்கள் – கடத்தியவர்களுக்கு பதவியை வழங் குவது தான் நல்லாட்சியா? போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் தாங்கி தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். (ஐ)

## காணி, மீன்பிடி பிரச்சினைகள் குறித்து இன்று யாழ். நகரில் கலந்துரையாடல்

### வடக்கு எம்.பிக்களுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாண காணி மற்றும் மீன்பிடி பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம். இன்று சனிக்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் காலை 10 மணிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த முக்கிய கலந்துரையாடலுக்கு யாழ் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் காணி பிரச்சினையினால் பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மீனவத் தலைவர்கள் பெண் தலைவிகள், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்பினர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளிகல்விநிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 31.08.2019 சனிக்கிழமையிலிருந்து 06.09.2019 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

இயக்குநர்கள்

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு
ரூபாய் 01 இலட்சம் கழிவு
யாழ்ப்பாணத்தில்!
SPECIAL OFFERS
கற்பகவனம் 2
எழுதுமட்டுவாழ்

1 ஏக்கர் - 16 பரப்பு
40 தென்னை
10-15 மாமரம்
40-60 தேக்கு
கல் இருக்கை 01 தொகுதி
20 கஜு மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்

2 ஏக்கர் - 32 பரப்பு
80 தென்னை
20-30 மாமரம்
80-90 தேக்கு
கல் இருக்கை 01 தொகுதி
40 கஜு மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்

5 வருட பராமரிப்பு
15 அடி அகலப் பாதை
24 மணிநேர பாதுகாப்பு
மாதாந்த பராமரிப்பு அறிக்கை
விடுமுறை வீட்டிற்கான இடவசதி
துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை
விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொதுவிடுதி ~ உணவகம் ~ உடற்பயிற்சிக்கூடம் ~ நீச்சல் தடாகம்
விளையாட்டுத்திடல் ~ நடைப்பயிற்சிக்கான பாதை ~ மீன்பிடி குளம்
முந்திரிகைத் தோட்டம் ~ மூலிகைத் தோட்டம்



சி. அனுராஜ்
உரிமையாளர்,
விற்பனையாளர்.

078 284 5000
021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
GOOD GIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD
Reg. No.: PV 115306

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இதற்காவது ஒன்றுபட மாட்டீர்களா?

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை இது ஓர் இக்கட்டான காலகட்டம். மிகவும் நெருக்கடியான அரசியல் சூழல்.

எழுபது ஆண்டுகளுக்கு மேல் தனது நியாயமான உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழர் தேசம், இக்காலகட்டத்தில் மிகப் பெரும் வலுவான பேரம் பேசும் சக்தியை வழங்கி நின்ற ஆயுத பலத்தைத் தொலைத்து – இழந்து – பத்தாண்டுகள் கடந்து விட்டன.

அதன் பின்னர் எச்சசொச்சமாக இருந்த ஜனநாயகப் பலம் மூலம் – வாக்கு வலிமை மூலம் – தந்திரோபாயமாக முன் நகர்த்திய அரசியல் திட்டமும் நான்கு வருட தீவிர முயற்சிகளின் பின்னர் இன்று முட்டுச் சந்தில் வந்து முடங்கி விட்டது.

இனி என்ன என்பதே கேள்வி.

இந்தச் சமயத்தில்தான் இந்தத் தீவில் தமிழர் தேசத்தையும் உள்ளடக்கிய இலங்கைக்கான நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தல் வருகின்றது.

அடுத்த தசாப்தத்தில் இலங்கையின் அரசியல் செல்நெறியைத் தீர்மானிக்கப் போகின்ற ஒரு வரலாற்று நிகழ்வாக இது கட்டவிழ்கின்றது.

இது வெறுமனே சிங்களத்தின் அரசியல் போக்கை முடிவு செய்கின்ற தேர்தல் மட்டுமல்ல, தமிழர் தேசத்தின் எதிர்காலத்தை – அதன் தலைவிதியை – தீர்மானிக்கும் ஒரு நிகழ்வாகவும் கூட இது அமையக் கூடும்.

இந்த விடயத்தில் தமிழர் தேசம் காத்திரமாக எதிர்வினை ஆற்றுவதன் மூலம் குறைந்த பட்சம் தன் இருப்பையாவது செப்பனாகத் தக்க வைத்துக் கொள்ள முயலலாம்.

நாடாளுமன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள் போன்றவற்றில் தங்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தமிழ்க் கட்சிகள் தாங்களுக்குள் முட்டுப்பட்டுக் கொள்வதும் மோதிக் கொள்வதும் வேறு.

ஆனால், தமிழர் தேசத்தின் தலையெழுத்தையும் சேர்த்து தீர்மானிக்கப் போகின்ற ஜனாதிபதி பதவியில் தமிழர்கள் நேரடியாகத் தங்கள் பிரதிநிதியை அமர்த்த முடியாவிட்டாலும், அந்தத் தெரிவில் காத்திரமாக – சாத்தியமான வகையில் – செல்வாக்குச் செலுத்துவதன் மூலமும் பங்களிப்பதன் மூலமும், குறைந்த பட்சம் எதிர்காலத்தில் தங்களுக்குக் காத்திருக்கும் அரசியல், சமூக, பொருளாதார, இருப்பியல் ரீதியான பேரழிவுகளைத் தவிர்த்து மட்டுப்படுத்தவாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளமுடியும்.

அப்படிச் செய்வதற்கு இந்தத் தேர்தலை தமிழர் தாயகம் ஒட்டுமொத்தமான ஒரு திரள் அணியாக, ஒன்றுபட்டு, ஐக்கியப்பட்டு நின்று வலுவான – கட்டுறுதியான – சக்தியாக எதிர்கொள்ளவேண்டும்.

தேர்தல்களில் தத்தமது வெற்றிக்காகக் கொள்கைக் கூட்டுகளின் அடிப்படையில் அணி சேர்ந்து, ஆசனம் பிரிக்கும் நமது தமிழ்க் கட்சிகள், ஒட்டுமொத்தத் தமிழின எதிர்காலத்துக்காக இந்தத் தேர்தலிலும் ஏன் ஓரணியில் சேரக்கூடாது?

அதன் மூலம் வலுவான ஒரு சக்தியாக கிளர்ந்து, அதைப் பயன்படுத்தி, தமது அரசியல் பாதைக்கான வலுவான அடித்தளத்தை இந்தத் தேர்தலில் ஏன் இட்டுக் கொள்ளக்கூடாது?

இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி தென்னிலங்கையில் மீண்டும் பௌத்த, சிங்களப் பேரினவாதப் பிசாசு விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கிவிட்டது.

அத்தகைய சக்தியின் கைகளில் நாட்டின் அதிகாரம் செல்லுமானால் தமிழர் தேசம் மீண்டும் ஒரு பேரழிவு நிலைக்குள் தள்ளப்படும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தமிழர் தேசம் ஒன்றுபட்ட சக்தியாக எழுவதன் மூலம் அத்தகைய கொடூர தரப்புகளின் கைகளில் அதிகாரம் மீண்டும் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்கச் செய்ய முடியும்.

வெறுமனே சாத்தியப்பாடற்ற சித்தாந்தங்களையும், பலன்தரா தத்துவங்களையும் பேசியபடி கனவுலகில் வாழ்வதை விடுத்து –

'அவன் துரோகி', 'இவன் எதிரி', 'இவன் காட்டிக் கொடுத்தவன்', 'அவன் முதுகில் குத்தியவன்' – என்ற பழைய குற்றச்சாட்டுப் பல்லவிகளைப் பாடி, கன்னை பிரிந்து, அபவாதத் தூற்றல்களில் ஈடுபடுவதை விடுத்து –

யதார்த்தமான முறையில் – சாத்தியமான வழியில் – ஒன்றிணைந்து நிற்பதன் மூலம் தென்னிலங்கையின் முன்னால் நாம் வெறும் அற்பத் துரும்பாக இல்லாமல், திரண்டு நிற்கும் அடம்பன் கொடியாக உறுதியோடு ஏன் எழ முடியாது?

தமிழர் தலைவர்களாகத் தம்மை முன்னிறுத்திக் கொள்ளும் சிரேஷ்ட தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, சுமந்திரன், நீதியரசர் விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப்பெருமாள் போன்றோருக்கு இந்தக் கோரிக்கை சமர்ப்பணம்.

மனம் உண்டானால் இடமுண்டு. பகைமை பார்த்தால் நமக்குரிய தகைமை கிட்டாது.

இந்தச் சமயத்திலாவது தமிழினம் ஒன்றுபடாதா? – இதுதான் அந்தரித்து நிற்கும் தமிழினத்தின் அவலக் குரலாக எழும் ஒரே கேள்வி.

## பலாலியிலிருந்து விமானசேவை நடத்துவதற்கு 5 உள்நாட்டு, 2 இந்திய நிறுவனங்கள் போட்டி

கொழும்பு, ஓக. 31

பலாலி விமான நிலையம் ஒக்ரோபர் நடுப்பகுதியில் திறக்கப்பட்ட பின்னர், அங்கிருந்து விமான சேவைகளை நடத்துவதற்கு 5 உள்நாட்டு விமான நிறுவனங்களும், இரண்டு இந்திய நிறுவனங்களும் விருப்பம் வெளியிட்டுள்ளன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் உபாலி ரத்நாயக்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பலாலி விமான நிலையம் வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதி திறக்கப்பட்ட பின்னர், ஐந்து உள்நாட்டு விமான நிறுவனங்கள், சேவையை ஆரம்பிக்க இணங்கியுள்ளன. அத்துடன் இரண்டு இந்திய நிறுவனங்களும் விமான சேவைகளை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு விமான சேவைகள் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்தே மேற்கொள்ளப்படும்.

பலாலிக்குப் பயணத்தை மேற்கொள்ளும், ஐந்து உள்நாட்டு விமான நிறுவனங்கள், மத்தல விமான நிலையம் மற்றும் வேறு சில பிராந்திய விமான நிலையங்களுக்கான சேவைகளையும் நடத்தவுள்ளன.

இந்த நிறுவனங்கள் 90 க்கு குறைவான ஆசனங்களைக் கொண்ட விமானங்களைக் குத்தகைக்குப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இந்த உள்நாட்டு விமான நிறுவனங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தைப் பயன்படுத்தும் வசதிகள் இன்னமும் உருவாக்கப்படவில்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர், பலாலி – இரத்மலானை இடையிலான விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும், பெரும்பாலான நிறுவனங்கள் அதிலிருந்து விலகிக் கொண்டன. இலங்கை விமானப்படையின் ஹெலி ருவர்ஸ் நிறுவனம் மாத்திரம் நீண்டகாலமாகச் சேவையை நடத்தி வருகிறது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை இதுபற்றி ஆய்வு செய்து, விமானங்களில் தேவையான எண்ணிக்கையான ஆசனங்கள் நிரம்பவில்லை என்றால், விமான நிறுவனங்களுக்கு வணிக நிதி வழங்க முடிவு செய்துள்ளது.

நிரம்பாத ஆசனங்களுக்குச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை பணம் செலுத்தும். இதனால் உள்நாட்டு விமான சேவைகள் இயங்குவது சாத்தியமாக இருக்கும் என்று கூறினார்.

அதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்ட பின்னர், இந்த உள்நாட்டு விமானங்கள் தரையிறங்க அனுமதி வழங்கப்படும் என்று விமான சேவைகள் அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் மூலம், அனைத்துலக விமானப் பயணிகளை ஏற்றிக் கொண்டு, உள்நாட்டு விமான நிறுவனங்கள் உள்ளூர்ப் பிராந்திய விமான நிலையங்களுக்குப் பறக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## விஜேதாஸ, ரத்னதேரர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, ஓக. 31

ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இவர்களுக்கு எதிரான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என ஐ.தே.கவின் சட்டச் செயலாளர் நிசங்க நாணயக்கார கூறினார்.

ஐ.தே.கவின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப் பட்ட அத்துரலிய ரத்ன தேரரும், விஜேதாஸ ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்தில் சுதந்திரமாகச் செயற்படவுள்ளனர் என அறிவித்து, எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யானைகள் அட்டகாசம் தென்னந்தோட்டம் நாசம்



வவுனியா, ஓக. 31

வவுனியா, நெடுங்கேணிப் பகுதியில் யானைகளின் அட்டகாசத்தால் தென்னந்தோட்டம் நாசமாகியுள்ளது.


நேற்று முன்தினம் மாலை வவுனியா, நெடுங்கேணிப் பகுதியில் உள்ள சேனைப்புலவு, சிவாநகர் ஆகிய கிராமங்களுக்குள் புகுந்த யானை அந்தப் பகுதியில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த மக்களை விரட்டியதுடன், தென்னந்தோட்டத்துக்குள் புகுந்து தென்னை மரங்களை நாசம் பண்ணியது.

யானைகளின் அட்டகாசத்தால் நூறுக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் அழிவடைந்துள்ளன. தென்னந்தோட்டச் செய்கையில் ஈடுபட்டவர்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்தப் பகுதியில் அடிக்கடி வரும் யானைகளினால் தமது தென்னந்தோட்டம் மட்டுமன்றி வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளும் அழிக்கப்படுகின்றன என தெரிவித்த அந்த மக்கள், யானைகளினால் தாம் அந்தப் பகுதியில் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ – 100)

## தெல்லிப்பழை துர்க்காதேவியின் மஹோற்சவம் இன்று ஆரம்பம்

முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம்



தெல்லிப்பழை, ஓக. 31

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கைலாச வாகன வீதிவலமும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத்திருவிழாவும் – 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் (ஆவணி ஓணம்) அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெற்று மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைரவர் பொங்கலுடன் திருவிழா இனிதே நிறைவு பெறும்.

திருவிழா நாள்களில் தினமும் காலைப் பூசை 5.30 மணிக்கு ஆரம்பமாகி, 9.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் திருவீதியுலாவும், மாலைபூசை 4 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் திருவீதியுலாவும் இடம் பெறும். (இ)

**நாளை** 01.09.2019 ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப 3.24 வரை
திதி : துதியை ந.ப 11.59 வரை
இராகுகாலம் : 4.35 – 6.05
சுப நேரம் : 9.05 – 10.35
மூன்றாம் ஆவணி ஞாயிறு

# மாலைதீவு சென்று திரும்பியதும் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு

## இராஜதந்திரிகளிடம் ரணில் உறுதி

கொழும்பு, ஓக. 31

மாலைதீவுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான அறிவிப்பை வெளியிடவுள்ளார் என வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.



கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை நேற்று முன்தினம்இரவுபிரதமர்ரணில்விக்கிரமசிங்க இராப்போசனவிருந்துடன் சந்தித்துப் பேசியுள்ளார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே உள்ளிட்ட ஸ்கன்டிநேவிய நாடுகளின் தூதுவர்கள் பலரும், இராஜதந்திரிகளும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போதே, மாலைதீவுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை மேற்கொள்ளவுள்ள பயணத்தின் பின்னர், புதிய கூட்டணி மற்றும் அதன் வேட்பாளர் தொடர்பான அறிவிப்பை வெளியிடப் போவதாக, பிரதமர்ரணில்விக்கிரமசிங்க, இராஜதந்திரிகளிடம் எடுத்துக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கலந்து கொண்டிருந்தார்.

அதேவேளை, ஜனநாயக தேசிய முன்னணியின் யாப்பு வரையும் பணிகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்துள்ளன. இதன்படி கூட்டணியின் தலைமைத்துவச் சபையின் தலைவராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

# பலாலியிலிருந்து விமான சேவை பிட்ஸ் எயார் நிறுவனம் திட்டம்

கொழும்பு, ஓக. 31

கொழும்பு–இரத்மலானை விமானநிலையத்தில் இருந்து, இலங்கையின் தனியார் துறை விமான நிறுவனமான பிட்ஸ் எயார் நிறுவனம், முதலாவது வெளிநாட்டுப் பயணிகள் விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

இரத்மலானையில் இருந்து இந்தியாவின் விசாகப்பட்டினம் விமான நிலையத்துக்கான இந்த விமான சேவை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை காலை 6 மணிக்கு இரத்மலானையில் இருந்து புறப்பட்ட, பிட்ஸ் எயார் நிறுவனத்தின் 70 ஆசனங்களைக் கொண்ட ஏ.ரி.ஆர். 72 விமானம், காலை 9.10 மணியளவில் விசாகப்பட்டினத்தைச் சென்றடைந்தது.

முன்னர், எக்ஸ்போ எயார் என்ற பெயரில் உள்நாட்டு விமான சேவைகளை மேற்கொண்ட நிறுவனமே தற்போது, பிட்ஸ் எயார் நிறுவனம், என்ற பெயரில் உள்நாட்டுப்பயணிகள்விமானசேவைகளையும், வெளிநாடுகளுக்கான சரக்கு விமான சேவைகளையும் நடத்தி வருகிறது.

பலாலி, மட்டக்களப்பு விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்ததும், இங்கிருந்து பயணிகள் விமான சேவைகளை ஆரம்பிக்கவும், பிட்ஸ் எயார் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (ஐ)




# நல்லூர் ஆலய சூழலில் இன்று



யாழ்ப்பாணம், ஓக.31

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில்–

இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை **வயலின் இசை** இளங்கலைஞர் மன்ற ஆசிரியரும் மாணவர்களும் கீபோட் – து.பிரசனன், மிருதங்கம் – ந.சதீஸ்குமார், கடம் – ந.கேதாரநாத்.

7.15 முதல் 8.15 வரை **பக்தி இசை** பாட்டு – ஜெயாசுகுமார், சாந்தன் கோகுலன், வயலின் – அ.ஜெயராமன், ஹார்மோனியம் – ந.செல்வச்சந்திரன், மிருதங்கம் – சதா. வேல்மாறன், தபேலா – பா.கபிலன், ப்பாட் – அ.கேதீஸ்.

# ஹக்கீமுடன் கோட்டாபய தொலைபேசியில் பேச்சு

கொழும்பு, ஓக. 31

*ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*இதன்போது, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமைச்சர் ஹக்கீம் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டார் எனக் கூறப்படுகிறது.*

*எனினும், இந்தப் பேச்சு தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.*

*ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் தற்போது. ஐ.தே.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ளது.*

*கடைசியாக நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் இந்தக் கட்சி ஐ.தே.க. தலைமையிலான கூட்டணி நிறுத்திய வேட்பாளரையே ஆதரித்து வந்தது. (ஐ)*

# பதவி உயர்வு பெறும் பிரிகேடியர்கள்!

கொழும்பு, ஓக. 31

ஜூலை 30 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆறு பிரிகேடியர்கள், மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளனர் என இராணுவத் தலைமையகம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

பிரிகேடியர்கள் டி.ஆர்.தர்மசிறி, எம்யூ.டி.ஜயசிங்க, சிகே.ஹன்டுன்முல்ல, எடி.எல்வத்த, இராணுவப் பேச்சாளர் எம்.எஸ்.பி.அத்தப்பத்து ஆகியோரே பதவி உயர்வு பெறுபவர்கள்.

அதேவேளை, ஒகஸ்ட் 15ஆம் திகதி முதல் ஏ.ஐ.மாரசிங்க மேஜர் ஜெனரலாக தரம் உயர்த்தப்படுகிறார். (ஐ)

# பொய் சொல்கிறார் சட்டச் செயலாளர்

## அவரை நீக்க வேண்டும் என்கிறார் அஜித் பெரேரா

கொழும்பு, ஓக. 31

ஜனாதிபதித்தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்படும் வரை வேட்பாளரை அறிவிக்க முடியாது என ஐ.தே.கவின்



யாப்பில் கூறப்பட்டிருக்கவில்லைஎனஅமைச்சர்அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.தே.கவின்சட்டச்செயலர் நிசங்க நாணயக்கார கூறியுள்ளது போன்ற விதிமுறை கட்சியின் யாப்பில் இல்லை. அவ்வாறு எங்கு கூறப்பட்டுள்ளது என்பதை அவர் நிரூபிக்கவேண்டும்.

கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் தனது பரப்புரையை திட்டமிட போதுமான நேரம் இருக்கவேண்டும்.

எனவே, பொருத்தமான வேட்பாளரைக் கண்டுபிடிப்பதைக் கட்சி தாமதப்படுத்த முடியாது.

மக்களை ஏமாற்றவும், அதிபர்தேர்தலில்கட்சிவெற்றி பெறுவதைத்தடுக்கவும்நிசங்க நாணயக்கார முயற்சிப்பதாகத் தெரிகிறது, அவ்வாறாயின் அவர் சட்ட செயலர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

# செப்ரெம்பர் 2 ஆம் திகதி மட்டக்களப்பில் ஹர்த்தால்

மட்டக்களப்பு, ஓக. 31

மட்டக்களப்பு – கல்லியங்காடு இந்து மயானத்தில் தற்கொலைக் குண்டுதாரியின் உடல் எச்சங்கள் புதைக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்துள்ள தமிழ் உணர்வாளர் அமைப்பு, புதைக்கப்பட்ட எச்சங்கள் விரைவில் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி செப்ரெம்பர் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது,

அவற்றை விரைவில் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர் ஹர்த்தால் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

தமிழ் உணர்வாளர் அமைப்பினால் இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்–

பாரம்பரிய கலாசார மத முறைமைக்கு மாறாக ஓர் இனத்தினரிதும் மதத்தினரதும் மனங்களை காயப்படுத்தும் முகமாக மட்டக்களப்பு கல்லியங்காடு இந்து மயானத்தில் முஸ்லிம் பயங்கரவாதியின் உடற்பாகங்களை புதைத்த நிகழ்வானது ஏற்க முடியாத ஒன்று.

மட்டக்களப்பு மாவட்டத்தை நிர்வகிக்கும் அரச அதிபரும் மட்டக்களப்பு நகரை ஆட்சி செய்யும் நகர பிதாவுமே இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாவர்.

பயங்கரவாதியின் உடல் எச்சம் புதைக்கப்பட்டதால் தமிழ் மக்கள் மத்தியில் ஆத்திரம் அருவருப்பு குரோத மனப்பான்மை என்பன அதிகரித்து வருகின்றன. இதற்கு தீர்வு தடியடியோ அல்லது கண்ணீர்ப் புகையோ கிடையாது.

மக்கள் தங்கள் எதிர்ப்புக்களை ஆக்ரோஷமாக வெளிக்காட்டிய போது இதனை கணக்கில் எடுக்காது ஒருவருக்கு ஒருவர் குற்றம்சாட்டிக் கொண்டு காலத்தை கடத்தாது புதைக்கப்பட்ட மனித எச்சங்களை உடன் அப்புறப்படுத்தாவிட்டால் உங்கள் செயற்பாடுகளுக்கு எதிராக தொடர் போராட்டங்கள் மாவட்டம் முழுவதும் முன்னெடுக்கப்படும்.

இதன் முதற்கட்டமாக செப்ரெம்பர் 2 ஆம் திகதி அமைதியான முறையில் ஹர்த்தாலை முன்னெடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றுள்ளது. (ஐ)

# பயங்கரவாதத்தைத் திணிப்பதை உடன் நிறுத்துங்கள் பாகிஸ்தானிடம் இந்தியா கண்டிப்புடன் எச்சரிக்கை!

புதுடில்லி,ஒக.31

பயங்கரவாதத்தை எங்கள் நாட்டிற்குள் புகுத்துவதை நிறுத்தி விட்டு, மற்ற அண்டை நாடுகளைப் போல் நடந்து கொள்ளுங்கள் எனப் பாகிஸ்தானிற்கு இந்தியா கண்டிப்புடன் எச்சரித்துள்ளது.

காஷ்மீரில் அம்மா நிலத்துக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதற்காக இந்தியாவிற்கு மிரட்டல் விடுக்கும் விதமாக பாகிஸ்தான் அரசு மற்றும் அந்நாட்டுத் தலைவர்கள் பேசி வருகின்றனர்.



இதற்குப் பதிலளித்துள்ள இந்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரவீஷ்குமார் –

காஷ்மீர் விவகாரத்தில் பாக். தலைவர்கள் மிகவும் பொறுப்பற்ற கருத்துக்களைக் கூறி வருகின்றனர். காஷ்மீர் விவகாரம் குறித்து ஐ.நா விற்கு பாகிஸ்தான் அனுப்பி உள்ள கடிதத்தில் காங்கிரஸ் எம்.பி.ராகுல், அரியானா முதல்வர் மனோகர் லால் கட்டார் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிட்டுள்ளமை பொறுப்பற்ற முறையில் உள்ளது.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்திற்கு உட்பட்ட விடயங்களில் பாகிஸ்தான் தலைவர்கள் கருத்து கூறி வருகின்றமையை வன்மையாகக் கண்டிக்கிறோம். பாகிஸ்தான் மற்ற அண்டை நாடுகளைப் போல் சாதாரணமாக நடந்து கொள்ள வேண்டும். சாதாரண வகையில் பேச்சு மற்றும் வர்த்தகம் செய்ய வேண்டும். பயங்கரவாதத்தை எங்கள் நாட்டிற்குள் திணிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்– எனக் கண்டிப்புடன் தெரிவித்துள்ளார்.

*விநாயகர் சதுர்த்தியையொட்டி*

# தமிழகத்தில் ஒன்றே கால் லட்சம் பிள்ளையாரின் உருவச் சிலைகள்!

சென்னை,ஒக.31

விநாயகர் சதுர்த்தி பண்டிகையையொட்டி, தமிழகத்தில் ஒன்றே கால் லட்சம் விநாயகர் சிலைகள் வழிபாட்டுக்காக வைக்கப்படும் என இந்து முன்னணி அமைப்பு தெரிவித்து உள்ளது.



இந்து முன்னணி மாநில அமைப்பாளர் க.பக்தவத்சலம் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இது தொடர்பாக செய்தியாளர்களுக்குப்பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தியை இந்து எழுச்சி நாளாக, ஓர் ஒற்றுமைத் திருவிழாவாக இந்து முன்னணி கொண்டாடி வருகிறது. அந்த வகையில் இந்தாண்டு விநாயகர் சதுர்த்தியை



நாளை மறுதினம் (செப்ரெம்பர் 2 ஆம் திகதி கோலாகலமாகக் கொண்டாட இந்து முன்னணி திட்டமிட்டுள்ளது.

இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தியையொட்டி தமிழகத்தில் ஒன்றே கால் லட்சம் விநாயகர் சிலைகள் வழிபாட்டுக்காக வைக்கப்பட இருக்கின்றன. சென்னையில் 5 ஆயிரத்து 501 விநாயகர் சிலைகள் வைக்கப்பட உள்ளன. வழக்கம்போல வடசென்னை, தென் சென்னை, மத்திய சென்னை என 3 பகுதிகளில் இருந்து விநாயகர் ஊர்வலம் தொடங்கி, பட்டினப்பாக்கம் மற்றும் பால வாக்கம் கடற்கரையில் முடிவடையும். அங்கு விநாயகர் சிலைகளைக் கரைக்க பொலிஸார் அனுமதி அளித்துள்ளனர்.– இவ்வாறு அவர் கூறினார்.

இந்து முன்னணி நிறுவுநர் ராம கோபாலன் கூறுகையில் –

இந்துக்களுக்குப் பல கடவுள்கள் என்று சொல்வோர் ஏராளம். ஆனாலும் எங்களுக்கு எல்லா கடவுள்களும் ஒன்றுதான். முதலில் தெய்வமே இல்லை என்றனர், பின்னர் தமிழ்க் கடவுள், தெலுங்கு கடவுள் என்று ஏதேதோ சொல்லி சிலர் விமர்சிக்கிறார்கள். இந்த விமர்சனத்தை முறியடித்து மக்களை ஒன்று சேர்க்கவேண்டும் என்றுதான் விநாயகர் சதுர்த்தியை ஒற்றுமை விழாவாகக் கொண்டாடுகிறோம் – என்றார்.

# கோயம்புத்தூர் சோதனையில் முக்கிய ஆவணங்கள் சிக்கின?





கோவை, வின்சென்ட் சாலை பகுதியில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை நடத்திய இடத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார்.

கோவை,ஒக.31

கோயம்புத்தூரில் ஐந்து இடங்களில் தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) அமைப்பினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சோதனை நடத்தினர். இதில் மடிக்கணினிகள், பல்வேறு முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கோவையில் கடந்த ஆண்டு இந்து இயக்கத் தலைவர்கள் சிலரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினர் என்ற சந்தேகத்தில் முஸ்லிம் இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவர்கள் சமூக வலைதளங்கள் மூலம் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களுடன் கருத்துகளையும், தகவல்களையும் பரிமாறியமை தெரிய வந்தது.

இதில் சில இளைஞர்கள் இலங்கைக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பில் இருக்கின்றமையும் விசாரணையில் வெளிவந்தது.

இதைத் தொடர்ந்து சமூக வலைதளங்களில் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக கருத்து பதிவிடுவோரை என்.ஐ.ஏ கண்காணித்து, இருவரைக் கடந்த ஜூன் மாதம் கைது செய்தது. கைது செய்யப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களின் வீடுகளில் என்.ஐ.ஏ. வியாழக்கிழமை சோதனை நடத்தியது. கோவை, உக்கடம், ஜி.எம். நகரைச் சேர்ந்த உமர் ஃபரூக், வின்சென்ட் சாலையைச் சேர்ந்த னோஃபர் அலி, சமீஷா முபின், பிலால் எஸ்டேட் பகுதியைச் சேர்ந்த முகமது யாசீர், பள்ளி வீதியைச் சேர்ந்த சதாம் உசேன் ஆகியோரது வீடுகளில் என்.ஐ.ஏ.அதிகாரிகள் 5 குழுக்களாகப் பிரிந்து சோதனை நடத்தினர்.

வியாழக்கிழமை காலை 5.30 மணிக்குத் தொடங்கிய இச்சோதனை பகல் 11 மணி வரை தொடர்ந்தது. இதில் ஐந்து பேரின் வீடுகளில் இருந்து சில முக்கிய ஆவணங்களை என்.ஐ.ஏ. கைப்பற்றியது. இதையடுத்து, அவர்களை ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

பின்னர் அவர்களில் முகமது யாசீர், சதாம் உசேன் ஆகிய இருவரையும் கொச்சியில் உள்ள என்.ஐ.ஏ. அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆஜராகுமாறு என்.ஐ.ஏ.தரப்பில் இருந்து நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

விநாயகர் சதுர்த்தி விழாவை சீர்குலைப்பதற்காக கோவையில் பயங்கரவாதிகள் ஊடுருவியுள்ளனர் எனக் கிடைத்த தகவலின்பேரில் மாநகரில் கடந்த சில நாள்களாக பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்சியின்போது வெடித்துச் சிதறிய டாங்கியின் பீரங்கி!

## விசாரணைக்கு ராணுவம் உத்தரவு

ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் இந்திய இராணுவ வீரர்கள் பீரங்கி டாங்கிகளை வைத்துப் போர்ப் பயிற்சி மேற்கொண்டபோது, ரி–90 டாங்கியின் பீரங்கிக் குழாய்ப் பகுதி வெடித்துச் சிதறியது. இது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இந்திய இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் கேணக் சோம்பித் கோஷ் செய்தியாளர்களிடம் கூறியவை வெளிமாறு:–

ராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டம் பொக்ரானில் உள்ள இராணுவப் பயிற்சி மையத்தில் புதன்கிழமை, ரி–90 ரக பீரங்கி டாங்கிகளை வைத்து இராணுவ வீரர்கள் பயிற்சி மேற்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு பீரங்கியின் குழாய்ப் பகுதி திடீரென பலத்த ஓசையுடன் வெடித்துச் சிதறியது. அதிர்ஷ்டவசமாக இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும், அந்தப் டாங்கி பலத்த சேதமடைந்தது. பீரங்கி வெடித்துச் சிதறியமைக்குக் காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. இது தொடர்பாக இராணுவ நீதிமன்றம் மூலம் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. – என்றார்.

ரி–90 மூன்றாம் தலைமுறை அதிநவீன தாக்குதல் ரக டாங்கியாகும். இது ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு ரஷ்யாவிடம் இருந்து முதல்முறையாக ரி–90 டாங்கிகளை இந்தியா வாங்கியது. தற்போது இந்திய இராணுவத்திடம் சுமார் 1,500 இற்கும் அதிகமான ரி–90 பீரங்கிகள் உள்ளன. 2020 ஆம் ஆண்டு வரை இந்த டாங்கிகளை வாங்க ரஷ்யாவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முந்தைய ரக டாங்கிகளுடன் ஒப்பிடும்போது, ரி–90 தயாரிப்புச் செலவு குறைவு; மேலும் தானே இயங்கும் திறனுடையது என்பதால், போர் வியூக வகுப்பாளர்களால் பெரிதும் விரும்பப்படும் டாங்கி ரகமாக இது உள்ளது.



# ஹொங்கொங் போராட்டக்காரர்களின் முக்கிய தலைவர் வாங் நேற்று கைது!



ஹொங்கொங்,ஓக.31

ஹொங்கொங்கில் நடந்து வரும் போராட்டத்தில், போராட்டக்காரர்களின் வழிகாட்டியாகவும், தலைமை தாங்குபவராகவும் இருந்த ஆர்வலர் ஜோஷ்வா வாங் நேற்றுக் கைது செய்யப்படுள்ளார்.

ஹொங்கொங்கில் கிரிமினல் வழக்குகளில் சிக்குபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.

இந்தச் சட்ட திருத்தப் பிரேரணையை முழுமையாக ரத்து செய்யவேண்டும், அதற்காகப் போராடுபவர்கள் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என வலியுறுத்தி இரண்டு மாதங்களுக்கு மேலாக மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையடுத்து சீன இராணுவத்தின் படைப்பிரிவுகள் ஹொங்கொங் நகருக்கு அணி வகுத்தது. இந்த படைப்பிரிவு விமானப்படை, கடற்படை மற்றும் ராணுவம் ஆகிய முப்படைகளை சேர்ந்த 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலான வீரர்களை உள்ளடக்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் நேற்றுக் காலை ஜனநாயகத்துக்கு ஆதரவாக செயல்படும் ஆர்வலர் ஜோஷ்வா வாங் கைது செய்யப்பட்டுள்ளார். இதனை ஜோஷ்வாவின் அரசியல் அமைப்பான டெமோசிஸ்டோ தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளது.


ஜோஷ்வா வாங்

இதில், நமது பொதுச் செயலாளர் ஜோஷ்வா வாங் கடுமையான முறையில் இன்று (நேற்று) காலை 7.30 மணி அளவில் கைது செய்யப்பட்டுள்ளார். தெற்கு ஹரி சான் பகுதிக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது தனியார் மினி வான் ஒன்றில் அவர் வலுக்கட்டாயமாகத் தள்ளப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நடந்ததையடுத்து நம் சட்டத்தரணிகள் இவ்வழக்கு குறித்து ஆலோசித்து வருகின்றனர்' என பதிவிடப்பட்டுள்ளது. ஜோஷ்வா கடந்த 2,3 வாரங்களாக போராட்டத்தில் தீவிரமாக இல்லாத போதும் அவர் போராட்டக்காரர்களால், மிக முக்கியமான தலைவராகப் பார்க்கப்படுகிறார்.

இந்த போராட்டம் தொடங்கியது முதல் இதுவரை சுமார் 800 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் போராட்டக்காரர்களின் வழிகாட்டியாகவும், தலைமை தாங்கிச் செயற்படுபவருமான ஜோஷ்வா வாங் கைது செய்யப்பட்டிருக்கின்றமை போராட்டக்காரர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




## தீப்பிளம்புடன் சீறும் இத்தாலி எரிமலை!

இத்தாலியில் புகையை மட்டும் கக்கி வந்த ஸ்ட்ரோம்போலி எரிமலை நெருப்புப் பிளம்பை சீற்றத்தோடு வெளியேற்றும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

காரிருளில் விண்ணை நோக்கி பல அடி உயரத்துக்கு சீறிப் பாய்ந்து லாவா பிளம்பு தெறிக்கின்றன. மலையில் இறங்கி வரும் போது நெருப்புப் பொறிகள் வெளிப்பட்டுத் சிதறுவதை சுற்றுலாப் பயணிகள் சிலர் அச்சம் கலந்த ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

இத்தாலியின் சிசிலி தீவில் உள்ள கடற்கரை பிரபலமான சுற்றுலாத் தளமாகும். இங்கு கடலை ஒட்டி அமைந்துள்ள எரிமலையானது உலகிலேயே அதிக செயல்பாட்டில் இருக்கும் எரிமலைகளில் ஒன்று என ஜியோலஜி டெடிகொம் என்ற இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1932ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது சீறி வரும் ஸ்ட்ரோம்போலி, இரு தினங்களாக புகையையும் சாம்பலையும் மட்டும் வெளியேற்றி வந்தது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு 3 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள எரிமலையில் இருந்து நெருப்புப் பிளம்புகள் வெளிப்பட்டு அங்குள்ள மக்களை அச்சுறுத்தி வருகின்றன. கடற்கரைக்கும், கடலுக்கும் மக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir



# தெல்லிப்பழை அன்னையை சரணடைந்து அல்லல்கள் நீங்கி இன்புற்று வாழ்வோம்!



சிவபூமியாக விளங்குகின்ற ஈழவள நாட்டில், சக்தி வழிபாடும் புராதன வழிபாடாகக் காணப்படுகின்றது. தெல்லிப்பழையில் துர்க்காதேவி, நயினை நாகபூசணி அம்மன், நல்லூர் வீரமாகாளி அம் மன், தாழையம்பதி துர்க்கை அம்மன், மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன், திருகோணமலை பத்திர காளியம்மன், வற்றாப்பளை கண்ணகை அம்மன், மாத்தளை முத்துமாரி அம்மன், பனிப் புலத்தில் முத்துமாரி அம்மன் போன்ற பல கோயில்கள் ஈழத்தில் பிரசித்தி பெற்ற அன்னை வழிபாட்டுத் தலங்களாகக் காணப்படுகின்றன.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம், உலகெங்குமுள்ள சக்தி உபாசகர்களால் ஏற்றிப் போற்றப்படும் ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ்ப்பாணத்தின் வடபால், காங்கேசன் துறைப் பெருந்தெரு வழியே, எட்டாவது மைல் கல் தொலைவில் அமைந்திருக்கின்றது. இவ்வாலயம் இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையை உடையது. இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீதுர்க்காதேவி, சகல வல்லமை படைத்தவளாக, வேண்டியவற்றை வேண்டியாங்கு பக்தர்களுக்குக் கொடுப்பவளாக விளங்குவதால், தாயைத் தேடி ஓடும் கன்றைப்போல், துர்க்கை அன்மையை நாடிப் பக்தர்கள் ஓடுகின்றனர். இவ்வன்னை, பக்தர்கள் வேண்டுவதையெல்லாம் வாரி வழங்குபவளாகக் காணப்படுகின்றாள்.

இவ்வாலயத்தின் பூர்வீகவரலாறு கதிர்காமர் என்னும் சைவப்பெரியாரோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இவர் தெல்லிப்பழையிலுள்ள உழுகுடைப்பதியில், வவுனாவத்தையில் சைவ மரபிலே தோன்றியவர். திருமூலர் வாக்கிற்கிணங்க ஊனுடம்பு ஆலயம் என்னும் சைவ நெறியின் உத்தமநெறியிலே ஒழுகியவர். எங்கெல்லாம் சைவாலயங்கள் காணப்படுகின்றனவோ அங்கு சென்று வணங்கித் தல யாத்திரை செய்வதில் இன்பங்கொண்டவராகக் காணப்பட்டார். இவரது இந்த ஆர்வத்தின் பயனாகவே தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் தோன்றியது.

இவ்வாறான மகத்துவங்களைக் கொண்ட துர்க்காதேவி வழிபாடு தெல்லிப்பழையில் சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகோற்சவம் மிக முக்கியமானது. ஆவணி மாத வளர்பிறை பூரநட்சத்திரத்தில் ஆரம்பமாகி, திருவோணத்தில் தீர்த்த விழாவோடு நிறைவுபெறும். இவ்வாலயம் பொதுமக்கள் ஆலயமாக விளங்குவதற்கு எடுத்துக் காட்டாக் கொடியேற்றத்திருவிழா பொது மக்களின் உபயமாக இடம்பெறுகின்றது. பன்னிரண்டு தினங்கள் மிக விமரிசையாக நடைபெறும் திருவிழாவைக் காண நாட்டின் பல பாகத்திலிருந்தும் மக்கள் இங்கு கூடுவர். அன்ன பூரணி மண்டபம் மகோற்சவ காலங்களில் அன்னம் பாலிக்கும் மண்டபமாகக் காட்சியளிக்கும்.

இங்கு காலத்திற்குக் காலம் அமைக்கப்படும் திருத்தொண்டுகளின் காரணமாக வெளிவீதி புதுப் பொலியோடு காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் சித்திரத்தேர் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. 1981 ஆம் ஆண்டு மிக அழகிய சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட இராஜகோபுரமும், அலங்காரநுழைவாயிலும் அமைக்கப்பட்டன. 1982 இல் துர்க்கா புஷ்கரணித் தீர்த்தத் தடாகம் அமைக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு அழகிய சப்பறம் கட்டப்பட்டது. இவற்றோடு அன்ன பூரணி கல்யாண மண்டபம், பக்தர்கள் விடுதி, இசைக் கலை மண்டபம், அகதிகள் சாலை, அன்ன தான மண்டபம், அலுவலர் இருப்பிடம், அந்தணர்கள் இருப்பிடம் ஆகியனவும் ஆலய வெளிவீதிக்கு அழகூட்டும் அமைப்புகளாகக் காணப்படுகின்றன.

**தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் மஹோற்சவப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.**

1981 ஆம் ஆண்டு, சித்திரை மாதம், இராஜ கோபுரத்திற்கு நடைபெற்ற மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்புடையது. இவ்விழாவிற்குத் தமிழகத்திலிருந்து வேதவிற்பன்னர்களும், ஹரிதாஸ் சுவாமிகளும் வருகை தந்தனர். இதேயாண்டு மே மாதம் இவ்வாலய முன்றிலில் சென்னை சைவ சித்தாந்த மாநாட்டுப் பவளவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்வைபவம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழகச் சைவசித்தாந்த பீடத்திற்கு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் ஐம்பதினாயிரம் ரூபாவை வைப்பு நிதியாக வழங்கியமை, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் சமய, சமூக மேம்பாட்டில் கொண்ட ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் பேணிக்காத்த சைவமரபைப் பேணிக்காப்பதில் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் அன்றும் இன்றும் முன்னணியில் நிற்கின்றது.

இவ்வாலயத்தின் சமூகப் பணிகள் ஏராளமானவை. பிறந்த மண்ணிலேயே தமிழ்மக்கள் காலந்தோறும் அகதிகளாக்கப்படும் கொடுமை நடைபெற்றுவந்துள்ளது. நாட்டிலே இனக்கலவரம் நடைபெற்ற காலங்களில் தமிழர்கள் தமது சொத்துக்களை இழந்து அகதிகளாக நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவது காலங் காலமாக நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாணம் தமது தாயகம் என்ற உணர்வோடு, தமிழர்களுக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய பூமி என்ற உணர்வும் இதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

1987 ஆம் ஆண்டிலே 500 இற்கும் மேற்பட்ட அகதிகளை இக்கோயில் ஆதரித்து உணவு, உடை, உறையுள் வழங்கியது யாவரும் அறிந்த செய்தி. கலவரத்தினால் ஊனமுற்றோர் பல்வேறு உதவிகளைப் பெற்றனர். குருநகர்ப் படுகொலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், மட்டக்களப்பில் தமது வீடுகளை இழந்து தவித்தோருக்கும் பல உதவிகள் வழங்கப்பட்டன. பாதிப்புற்ற வீடுகளைத் திருத்துவதற்கும், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் அகதியாகக் காணப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளையும், பண உதவியையும் செய்து, மக்கள் பணியே மகேசன் பணி என, சொல்லும் செயலும் ஒன்றாகி, ஈழத்திலுள்ள இந்து ஆலயங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயம் விளங்குகின்றது.

## அறப்பணிகளில்...

ஏழையின் சிரிப்பில் ஆண்டவனைக் காணலாம் என்ற கொள்கையை முன்னெடுப்பதிலும், துன்பப்பட்டோர் துயரழிப்பதிலும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றது. விழிப்புலனற்றோர், முடமானோர், புற்றுநோயாளர் ஆகியோரின் வதிவிட வசதிகளை ஏற்படுத்தும் நிறுவனங்களுக்கும், யாழ் அரசினர் வைத்திய சாலை அவசரசிகிச்சைப் பிரிவிற்கும், தெல்லிப்பழை அரசாங்க வைத்திய சாலை, தெல்லிப்பழை கூட்டுதல் வைத்தியசாலை ஆகியவற்றிற்கும் அன்பளிப்புச் செய்துள்ளது. அவற்றோடு பாடசாலைகளுக்கு வேண்டிய உதவிகளையும் அவ்வப்போது செய்து வந்துள்ளது.

அக்காலத்தில் மன்னர்களின் ஆதரவுடன் நடைபெற்று வந்த ஆலயங்கள், சமய சமூகப் பணியோடு, தாய்மொழி வளர்ச்சி தொடர்பான விடயங்களிலும் அக்கறை செலுத்தியுள்ளன. அந்த மரபை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் காணக்கூடியதாயுள்ளது. ஈழமண்ணிலே பல அறிஞர்களும் பல்வேறு புலமை பெற்றோரும் நூல்களை எழுதி, அவற்றை அச்சிற்கொண்டுவர வசதியின்றி வாழ்ந்துள்ளனர். அவர்களைக் கண்டுபிடித்து அந்நூல்களைத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் நூல்வடிவாக்கி வெளியிட்டது. தேவஸ்தான நிதியில் ஒருபகுதி நூல்வெளியீட்டுக்காக ஒதுக்கப்பட்ட செய்தி பலருடைய புலமை வெளிவர உதவியது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றும் பணிகளில் தலையாயதும் அறப்பணியாகக் கருதப்படுவதுமான பணி, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணியாகும். 1982 இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மகளிர் இல்லம், ஆரம்பத்தில் சிறிய கட்டடமொன்றில், ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுமிகளை ஆதரித்து, சகல பராமரிப்புகளையும் வழங்கியது. இன்று நூற்றுக்கும் அதிகமான பிள்ளைகளை இவ்வில்லம் பராமரித்து வருகின்றது. இவர்களுள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் அடங்குவர். பெற்றோரை இழந்தவர்கள், விவாகமாகாத பெண்கள், விதவைப்பெண்கள் எனப் பல்வேறுபட்ட பெண்களை இவ்வில்லம் ஆதரித்து வருகின்றது.

இவ்வாறான பணிகளில் துர்க்காதேவி தேவஸ் தானம் ஈடுபடுவதற்கு இங்கு நடைபெறும் சீரான நிர்வாகமுறையே காரணமாக இருக்கின்றது. 1962 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட துர்க்கா தேவி திருப் பணிச்சபையில் இணைந்து, அதன் பொருளாளர் பதவியை ஏற்று, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய முன் னேற்றத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

1965 ஆம் ஆண்டு இவ் அம்மையாரது பெருமுயற்சியின் காரணமாக ஸ்ரீதுர்க்காதேவி கோயில் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவர் 1977 ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். அவர் அமரத்துவம் அடையும் வரை தொடர்ந்து அறங்காவலர் சபைத் தலைவராக அம்மையாரே இருந்து வந்தார். அந்த வகையில் தேவஸ்தானத்தைத் திகழவைத்த பெருமை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையே சாரும்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி துர்க்காதேவி தேவஸ்தானத்திற்காக ஆற்றிய அறப் பணிகள், அர்ப்பணிப்பான சேவை என்றும் மறக்கற்பாலது.

அந்தப் பணிகளை அம்மையாரின் தொண்டனாக இருந்து இன்று செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆற்றி வருகின்றார். அன்னாரின் அறப்பணிகள், ஆற்றி வரும் தொண்டுகள், சேவைகள், ஏராளம், ஏராளம்.

இவ்வாறாகத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் பல்வேறுவகையிலும் சிறப்புப்பெற்று, வெறும் பூசைகளையும் விழாக்களையும் நடத்துகின்ற ஆலயமாகக் காணப்படாது, மக்கள் ஆலயமாகச் சிறந்து விளங்குகின்றது.

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்
குசமம் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத் தொழு
வார்க்கு ஒரு தீங்கில்லையே

என்றவாறு, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவியைச் சரணடைந்தவர்கள் அல்லல்கள் நீங்கி இன்புற்று வாழ்வர். ★

# கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கை மேற்குலகத் தூதுவர்கள் புறக்கணிப்பு!

## சவேந்திர சில்வா விவகாரம் காரணமா?







கொழும்பு, ஓக. 31

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் நடக்கும் கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கை, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள் புறக்கணித்துள்ளனர்.

போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன. இந்நிலையிலேயே மேற்குலக இராஜதந்திரிகள் இதனைப் புறக்கணித்துள்ளனர்

இலங்கை இராணுவத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு – 2019 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமானது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா வரவேற்புரை நிகழ்த்த, பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சாந்த கொட்டேகொட சிறப்புரை நிகழ்த்தினார்.

இதையடுத்து, பல்வேறு நாடுகளில் இருந்து வந்த நிபுணர்களும், உள்நாட்டு வளவாளர்களும் உரையாற்றினர்.

இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கில் 42 நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 800 பேர் பங்கேற்றுள்ளனர் என இலங்கை இராணுவம் கூறியுள்ளது.

எனினும், நேற்று முன் தினம் தொடக்க நிகழ்வில் அமெரிக்கா, மற்றும் பல ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள், பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்து கொள்ளவில்லை.

புதிய இராணுவத் தளபதியாக – போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளதற்கு அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன.

இந்த நிலையிலேயே புதிய இராணுவத் தளபதியின் தலைமையில் நடக்கும் இந்த பாதுகாப்புக் கருத்தரங்கில் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகளும், பாதுகாப்பு ஆலோசகர்களும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாக்குமூலம் வழங்குமாறு ரவிக்கு நீதிமன்றம் உத்தரவு

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பொய்ச் சாட்சியம் வழங்கியதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் 14 நாள்களுக்குள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது. இதன்போது விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் நேற்றுமுன்தினம் முதல் இரு வாரங்களுக்குள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்குமாறு பிர தான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த விசாரணைகள் தொடர்பான அறிக்கையை நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு

கொழும்பு, ஓக. 31

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.



இந்தச் சந்திப்பு, விஜேராமையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, ஜி.எஸ்.பி. உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)






காலைக்கதிர்
Kalaikathir



# தென்னாபிரிக்காவுடன் ரி – 20:

## இளம் வீரர்களை கொண்ட இந்திய அணி அறிவிப்பு!




தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில் விளையாடும், இந்திய அணியின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம், இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் தென்னாபிரிக்கா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்த நிலையில், இத்தொடரில் முதலாவதாக நடைபெறும் ரி – 20 தொடருக்கான, எதிர்பார்ப்பு மிக்க இந்திய அணி விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்த அணி, பெரும்பாலும் இளம் வீரர்களைக் கொண்ட அணியாகவே அமைந்துள்ளது.

சகலதுறை வீரரான ஹர்திக் பாண்ட்யா, மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரிற்கு பிறகு நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணியுடனான ரி – 20 தொடரில், ஹர்திக் பாண்ட்யாவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது.

இதற்கு அடுத்தபடியாக, இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான புவனேஸ்வர் குமார் மற்றும் ஜஸ்பிரிட் பும்ரா ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு பதிலாக தீபக் சஹார் மற்றும் நவ்தீப் சைனி ஆகியோர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இதுதவிர கலீல் அஹமட்டுக்கும் அணியில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேலும், அணியின் மூத்த வீரரான மகேந்திர சிங் டோனி, இரண்டு மாத கால ஓய்வில் இருப்பதால், இத்தொடரிலும் இருந்து அவர் விலகியுள்ளார். இதற்கு முன்னதாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான தொடரில் அவர் விளையாடவில்லை.

டோனிக்கு பதிலாக வழமை போலவே இளம் விக்கெட் காப்பாளரான ரிஷப்பந்திற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களான குல்தீப் யாதவ் மற்றும் யுஸ்வேந்திர சஹால் ஆகியோருக்கும் அணியில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரர்களான வொஷிங்டன் சுந்தர் மற்றும் குர்ணல் பாண்ட்யா ஆகியோர் அணியில் இணைந்துள்ளனர்.

விராட் கோஹ்லி தலைமையிலான அணியில், ரோஹித் சர்மா, ஷிகர் தவான். கே.எல். ராகுல், ஸ்ரேயஸ் ஐயர், மனிஷ் பான்டே, ரிஷப் பந்த், ஹர்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, குர்ணல் பாண்ட்யா, வொஷிங்டன் சுந்தர், ராகுல் சஹார், கலீல் அஹமட், தீபக் சஹார், நவ்தீப் சைனி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ரி – 20 போட்டி, எதிர்வரும் மாதம் 15ஆம் திகதி தர்மசாலா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# அஸ்வின் ஓரங்கட்டப்படுகிறாரா? ரகசியத்தை கூறிய ஹர்பஜன் சிங்!

இந்தியக் கிரிக்கெட் அணியில் ஒரு காலகட்டத்தில் மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் ஜொலித்த அஸ்வின், தற்போது அணியில் இடம்பெற முடியாமல் திணறி வருகிறார்.

இதற்கு, அவர் தனது திறமையை நிரூபிக்காமை, புதிய வீரர்களின் வரவு என பல காரணங்கள் முன்னிறுத்தப்பட்டாலும், அவர் தொடர்ந்தும் அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டு வருவது பலருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், நீண்ட போராட்டத்திற்கு பிறகு தற்போது மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் அஸ்வின் இடம்பெற்றுள்ளார்.

ஆனாலும், இத்தொடரின் முதல் போட்டியில் அஸ்வின் அணியில் இடம்பெறவில்லை. இந்த விடயம் பலராலும் உற்று நோக்கப்பட்டது.

இதற்கு காரணம், அஸ்வின் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சிறந்த பிரதியை பதிவு செய்திருப்பதே ஆகும்.

அஸ்வின், மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக 11 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 60 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அத்தோடு, 2016ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில், 17 விக்கெட்டுகளை வீழ்த்தி தொடரின் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.



எனினும், அஸ்வின் அணியில் இடம்பெறாதது பலரையும் குழப்பமடைய வைத்துள்ளது. இந்த நிலையில், அவர் ஏன் அணியில் இடம்பெறவில்லை என்பதை ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'அஸ்வின் வெளிநாட்டு தொடர்களில் சரியாக விளையாடியது கிடையாது. பல உதாரணங்கள் இருக்கின்றன. கடந்தாண்டு சவுத்தம்ப்டனில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியை கூறலாம். மொயின் அலி 9 விக்கெட்டுகளை வீழ்த்தி இங்கிலாந்தை வெற்றி பெற வைத்தார். அந்த போட்டியில் அஸ்வின் வெறும் 3 விக்கெட்டுகள் மட்டுமே வீழ்த்தினார்.

உடற்தகுதி இல்லை. அதேபோல ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்திலும் முதல் டெஸ்டிலேயே காயமடைந்தார் அஸ்வின். அவர் எப்படியும் உடற்தகுதி பெற்றுவிடுவார் என்று அணி நிர்வாகம் நினைத்தது. ஆனால் என்ன நடந்தது? அவர் உடற்தகுதியே பெறவில்லை.

ஒவ்வொரு போட்டியிலும் வீரர்களின் உடற்தகுதியை பார்த்து தான், விளையாடும் 11 பேர் கொண்ட வீரர்கள் பட்டியல் உறுதி செய்யப்படும். இந்த விவகாரங்கள் தான் அஸ்வின் ஓரங்கட்டப்பட்டதற்கு காரணம்' என கூறியுள்ளார்.

அஸ்வினின் வருகையின் பின்னரே, ஹர்பஜன் சிங்கின் இடம் பறிபோனது என பேசப்படுகின்ற நிலையில், இருவருக்கும் இடையில் எப்போதும் மோதல் நிலையே நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அஸ்வின் இன்னமும் 8 விக்கெட்டுகள் வீழ்த்தினால் வேகமாக 350 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை பதிவு செய்வார். இதற்கு முன்னதாக இலங்கை ஜாம்பவான் முரளிதரன் 66 போட்டிகளில் 350 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சாதனையாக உள்ளது.

# ஓய்வு முடிவை மீளப் பெற்றார் அம்பத்தி ராயுடு!

உலகக்கிண்ண இந்திய அணியில் வாய்ப்புக் கிடைக்காத விரக்தியில், அவசரப்பட்டு ஓய்வை அறிவித்த இந்தியக் கிரிக்கெட் அணியின் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் அம்பத்தி ராயுடு, தனது ஓய்வு முடிவை மீளப் பெற்றுள்ளார்.

அண்மையில், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் நடத்தும் ஒரு நாள் தொடரில் கலந்து கொள்ள தமிழ்நாடு வந்த போது, ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அம்பத்தி ராயுடு, தான் அவசரப்பட்டே ஓய்வு முடிவை அறிவித்ததாகவும், மீண்டும் கிரிக்கெட் விளையாட ஆசைப்படுவதாகவும் கூறியிருந்தார்.

இந்த நிலையில், தனது ஓய்வு முடிவை மீளப் பெற்று, மீண்டும் கிரிக்கெட் விளையாட முடிவு செய்துள்ள அம்பத்தி ராயுடு, இதுதொடர்பாக ஹைதராபாத் கிரிக்கெட் அமைப்புக்கு மின்னஞ்சலொன்றை அனுப்பியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது, 'நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு அறிவித்திருந்தேன். அந்த அறிவிப்பில் இருந்து வெளியே வந்து மீண்டும் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட விருப்பமாக இருக்கிறேன் என்பதை நான் உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

என் கடினமான நேரத்தில் என்னுடன் துணை இருந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, வி.வி.எஸ். லட்சுமண், நோயல் டேவிட் ஆகியோர் எனக்கு ஆறுதல் தெரிவித்து, என்னை ஊக்கப்படுத்தி, இன்னும் அதிகமாகச் சாதிக்க வேண்டி இருக்கிறது என்பதை உணர்த்தினார்கள், புரிய வைத்தார்கள்.

மிகச்சிறந்த ஹைதராபாத் அணியில் நான் மீண்டும் விளையாடுவதற்கான வாய்ப்பை இந்த சீசனில் எதிர்நோக்கி இருக்கிறேன், என் திறமையை அறிந்து எனக்கு உதவுவார்கள் என நம்புகிறேன். செப்ரெம்பர் 10ஆம் திகதியில் இருந்து ஹைதராபாத் அணியில் இணையத் தயாராக இருக்கிறேன்' எனக் கூறியுள்ளார்.

இந்த கடிதத்தினை ஹைதராபாத் கிரிக்கெட் அமைப்பும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகையால் 2019 – 20ஆம் ஆண்டுக்கான சீசனில் ஹைதராபாத் அணியில் அம்பத்தி ராயுடு தேர்வு செய்யப்படுவார்.

2010ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரின் பலரினதும் கவனத்தை ஈர்த்த அம்பத்தி ராயுடு, 2013ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தைப் பெற்றுக் கொண்டார்.

நடுத்தர துடுப்பாட்ட வரிசை வீரரான அம்பத்தி ராயுடு, ஆரம்ப காலங்களில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி தனக்கென ஒரு இடத்தை அணியில் தக்கவைத்துக் கொண்டார்.



பின்னர், அணியில் சோபிக்க தவறியதால் அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்ட அவர், 2018ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் தனது மீள்வருகையை நிரூபித்தார். சென்னை அணிக்காக அவர் 16 இன் னிங்ஸ்களில் விளையாடிய அவர் 602 ஓட்டங்களை குவித்து அதிக ஓட்டங்களை பெற்ற நான்காவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

பின்னர், மீண்டும் சர்வதேச அணிக்கு திரும்பி, தனது வழக்கமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வந்தார். ஆனால், சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில், அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அவருக்கு பதிலாக தமிழக சகலதுறை வீரர் விஜய் சங்கர் உள்வாங்கப்பட்டார். இதனால் ராயுடு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் வகையில், இதனை கடுமையாக விமர்சித்தார். எனினும், அணியில் தனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர் இருந்தார். உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின்போது ஷிகர் தவான் மற்றும் விஜய் சங்கர் இருவரும் காயம் காரணமாக விலகினர். ஆனால் மாற்று வீரர்களை தேர்வு செய்யும்போது ராயுடுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இதனால் கடும் அதிருப்தி அடைந்த அம்பத்தி ராயுடு. ஐ.பி.எல் உட்பட அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் விலகுவதாக அறிவித்தார். தற்போது மீண்டும் தனது ஓய்வு முடிவினை மாற்றிக்கொண்டுள்ள 33 வயதான அம்பத்தி ராயுடு, இன்னும் ஓரிரு வருடங்கள் கிரிக்கெட் விளையாட தீர்மானித்துள்ளார். (ஐ)

## நாடு உருப்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பை உருவாக்குவதாகக் கூறி பல கோடிக் கணக்கானபணத்தைச்செலவழித்தார்கள். அரசமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கு வெளிநாடுகளுக்குப்பயணம் போனார்கள். நாடு பிரிபடப் போகிறது என்று தென்னிலங்கை மக்களுக்குக் கூறி அவர்களுடைய கோபங்களைச் சம்பாதித்தார்கள். இத்தனையையும் அவர்கள் செய்து கடைசியில் வடக்கு மக்களை ஏமாற்றிவிட்டார்கள். இந்தப் பாவகாரியத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை–என்றும்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன சொன்னார்.

அப்படியானால்கடந்த நான்கு வருடங்களக அவர்கள் என்ன செய்தார்கள்? வடமாகாண மக்களை ஏமாற்றி விட்டார்கள் என்றும் ஜனாதிபதி சொன்னார்.

ஜனாதிபதியின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' வேலைத் திட்டத்தின் இறுதிநாள் நிகழ்வு யாழ் மாநகர மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' வேலைத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தில் உங்களோடு கலந்து கொள்வதையிட்டு நான் மிகவும் சந்தோசப்படுகிறேன். இந்தத் திட்டத்தைப் பல மாவட்டங்களிலும் செய்துள்ளோம். அரசியல்வாதிகள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எல்லோரும் நாட்டை முன்னேற்றுவதற்காக ஒன்றுபட வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைச் சிறப்பாக அமைப்பதற்காகத்தான் இந்த வேலைத்திட்டத்தை நாங்கள் முன்னெடுத்திருக்கின்றோம்.

இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் கடந்த முப்பது வருடங்களாக நடந்த யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளார்கள். நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைந்தது. நாட்டிலே உண்மை, நியாயம், வழமை எல்லாம் மறைந்து விட்டன. யுத்தம் எல்லாவற்றையுமே அழித்து விட்டது.

எனவே நாங்கள் எந்தவிதத்திலும் இனிமேல் ஒரு யுத்தத்தை எதிர்பார்க்கக் கூடாது. இந்த நாட்டில் இருக்கக் கூடிய மாகாணங்களின் அபிவிருத்தியின் போது வட மாகாணம் மிக மிக முக்கியமானது. வட மாகாணம் யுத்தத்தின் கேந்திர நிலையமாக இருந்ததால்தான் நான் அப்படிச் சொல்கிறேன். வடக்கிலே பொருளாதார பிரச்சினைகள் மாத்திரமல்ல, பல சமூகப் பிரச்சனைகளும் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும்.

அரசாங்கம் என்ற வகையில் கடந்த நான்கு வருடங்களாக வட மாகாணத்திலே பல வேலைத் திட்டங்களை நாங்கள் முக்கியப்படுத்திச் செய்திருக்கின்றோம். நாட்டிற்காக ஒன்றிணைவோம் என்ற வேலைத் திட்டத்தை வடக்கிற்கும் கொண்டு வந்தது இதனடிப்படையில்தான். இங்கு மீன்பிடி மற்றும் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முகாமாக திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். அதே போல் வேலையில்லாப் பிரச்னையையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மேலும் கிராம சக்தி செயற்திட்டத்தினூடாக விவசாயம், சுற்றுச் சூழல் திட்டங்கள் மற்றும் போதை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். யாழ்ப்பாணப் பகுதியிலே போதைப் பொருள் நிறைய இருக்கின்றன. எனவே சட்டவிரோதமாகச் செயற்படுகின்ற போதைப் பொருளைத் தடுக்க அரசு என்ற ரீதியில் பல நடவடிக்கை எடுக்கிறோம். அடுத்தவாரம் முதல் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையொன்றை புதிதாக ஆரம்பிக்க இருக்கிறோம்.

அதே போன்று சிறுநீரகநோய்த் தடுப்பு விசேட திட்டத்தையும், பிள்ளைகளைப் பாதுகாக்கும் வேலைத் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இந்த மேடையில் பேசும் போது 'தேர்தல் காலத்தில் நீங்கள் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தீர்கள், அதில் பலவற்றைச் செய்துள்ளீர்கள், அதே நேரம் இன்னும் பல செய்ய வேண்டியிருக்கின்றன, அதற்கு என்ன சொல்லப் போகின்றீர்கள்?' – என்று என்னிடம் கேட்டிருக்கின்றார்.

நான் கொடுத்த வாக்குறுதிகளில் பல விடயங்களை இன்று இங்கும் செய்திருக்கின்றேன் என்பதை நான் சொல்ல விரும்புகின்றேன்.

தேர்தல் காலத்தில் நான் சொன்ன விடயங்கள்தான் குடிதண்ணீர், மீன்பிடி எல்லாம். யுத்த காலத்தில் பாதுகாப்புப் பிரிவினர் வைத்துக் கொண்டிருந்த காணிகள் பற்றி பேசியுள்ளீர்கள். அதில் தனிப்பட்ட காணிகள், அரச காணிகள் என 95 வீதமான காணிகள் இப்போது விடுவிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த இரு நாள்களுக்கு முன்னர் கூட்டமைப்பினருடன் இது தொடர்பில் கொழும்பிலே நாங்கள் பேச்சு நடத்தினோம்.

ஏதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள்ளே இந்தக் காணிப் பிரச்சினை முற்று முழுதாகத் தீர்த்து விட வேண்டுமென்று முப்படைத்தலைமைகளுக்கும் அதே போன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் நான் உத்தரவிட்டிருக்கின்றேன். ஆகையினால் அந்த வேலைத் திட்டம் சரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாங்கள் வடக்கிற்கும் முழு நாட்டிற்கும் ஜனநாயகத்தை நன்றாக வழங்கியிருக்கின்றோம். நாங்கள் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

கடந்த ஐம்பது வருட கால சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் எந்த ஜனாதிபதியும் செய்யாத பல வேலைகளை நான் செய்திருக்கிறேன்.

அரசியல் காரணங்களுக்காக எங்களுடைய எந்த துப்பாக்கியும் யார் மீதும் நீட்டப்படவில்லை என்பதை நான் தெட்டத் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஏனைய ஜனாதிபதிகளுக்கு எதிராகப் பல விதமான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அரசாங்கத்தின் துப்பாக்கிகள் எவ்வாறு வேட்டு வைக்கப்பட்டன, என்னவெல்லாம் நடந்தன என்று பார்த்தால் பல கஷ்டங்கள், துன்பங்களைக் கொடுத்தார்கள். அவர்கள் வீடுகளில் தீயை வைத்துக் கொளுத்தினார்கள். ஊடகங்களைத் தீவைத்துக் கொளுத்தினார்கள். ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்திய சேதங்கள், நஷ்டங்கள் ஏராளம்.

நான் ஜனநாயகத்தையும் சமாதானத்தையு நிலைநாட்டியிருக்கின்றேன். அதனால்தான் என் மீது அப்படியான எந்தவொரு குற்றச்சாட்டும் இதுவரையில் இல்லை. எனவே எந்தவிதமான விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும் சமாதானத்திற்காகவும் நீதிக்காகவும் நான் முழுமையாகச் செயற்பட்டிருக்கிறேன்.

கடந்த நான்கு வருட காலத்திற்கு முன்னர் நாம் வந்த போது புதிய அரசமைப்பொன்றை நாடாளுமன்றத்தில் உருவாக்க முயன்றார்கள். அதற்குக் கோடிக் கணக்கான பணம் செலவழித்தார்கள்.

எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல முக்கியஸ்தர்கள் எல்லாம் சேர்ந்து புதிய அரசமைப்பை உருவாக்குவது பற்றி ஆராய்வதற்காக வெளிநாடுகளுக்குப் பயணம் போனார்கள்.

ஜனாதிபதிபதவியைவலுவாக்க வேண்டுமென்று கடந்த வருடம் நான் சொன்னேன். ஆனால் நான்கு வருடகாலமாக ஆட்சி புரிந்தவர்கள் செய்தது ஒன்றுமே இல்லை. அது எனது தவறு அல்ல. எனவே அவற்றில் நான் தலையிடவில்லை. ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் நான் அதற்காக ஏதும் சொல்லவில்லை. ஆனால் இது சம்பந்தமாக நான் ஏதும் செய்யவில்லை என்று ஐக்கியதேசியக் கட்சி இப்போது சொல்கிறது. அப்படியானால் கடந்த நான்கு வருடங்களாக அவர்கள் என்ன செய்தார்கள்? வடமாகாண மக்களை ஏமாற்றி விட்டார்கள். தென்னிலங்கையில் இருக்கக் கூடிய மக்களுக்கு இந்த நாட்டைப் பிரிக்கப்போகிறார்கள் என்று காட்டி அவர்களுடைய கோபங்களைச் சம்பாதித்துக் கொண்டார்கள். ஆனால் அந்தப் பாவகாரியத்துடன் நான் சம்பந்தம் இல்லாதவன். அரசமைப்பு விவகாரத்தை வைத்தே அரசாங்கமும் எதிர்க் கட்சியும் பேசுகின்றன.

உண்மையிலேயே நாட்டை நாங்கள் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமானால் புதிய அரசமைப்பு ஒன்று நிச்சயமாகத் தேவைப்படுகிறதுதான்.

ஆனால் நாங்களே கொண்டு வந்த 19 ஆவது திருத்தச் சட்டம் முற்றுமுழுதாக இல்லாமல் செய்யப்பட வேண்டும்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் நாட்டிலே அதிகாரமுள்ள தலைவர்களை மூன்றாக உருவாக்கியிருக்கிறது.

ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரத்தில் பாதியை எடுத்து பாதியைக் கொடுத்திருக்கிறார்கள்.

பிரதமருக்கு அதிகாரத்தைக் கூட்டியிருக்கிறார்கள்.

சபாநாயகருக்கு இன்னும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்தான் சுயாதீன ஆணைக் குழுக்களைப் பரிபாலிக்கின்றார்.

எனவே மூன்று தலைவர்கள் செயற்படுகின்ற போதுதான் நாட்டிலே குழப்பங்கள் எல்லாம் ஏற்படுகின்றன.

ஆனால் இங்குள்ள பிரச்சனை என்னவென்றால் – இந்த 19 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு விருப்பமுள்ள பிரதம மந்திரி யார் என்பதுதான். அதுவே இங்குள்ள கேள்வி. எனவே நாடாளுமன்றத்தில் ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இது மாற்றப்பட வேண்டும்.

ஜனநாயகம், சமாதானம், ஐக்கியம் பற்றிப் பேசும் பொழுது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நல்லதொரு அரசமைப்பு நிச்சயாகத் தேவைப்படுகிறது.

அரசியல் பேதங்களை மறந்து, நாட்டிற்காக, அரசாங்கத்தினர், எதிர்த்தரப்பினர் எல்லோரும் சேர்ந்து இதைச் செய்து முடிக்க வேண்டும். அப்படி செய்தால்தான் நாட்டிலே நல்ல ஒரு சேவையை செய்ய முடியும். இல்லாவிட்டால் நல்ல சேவையை அரசாங்கத்தால் செய்ய முடியாமல் போய் விடும். நாடு விழுந்துவிடும்.

ஜனாதிபதித் தேர்தலொன்று அண்மையில் வரப் போகிறது. ஆனால் இதை திருத்துவதற்கு – அரசமைப்பை ஒழுங்குபடுத்துவதற்கு – இந்த அரசாங்கத்திற்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறது. அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இதைப் பற்றிச் சிந்தித்து மிகவும் கவனமெடுத்துச் செயற்பட வேண்டும்.

எனவே இருபதுக்கு இருபது – அந்த வருடத்திலர் புதிய ஆட்சி வந்தாலும் கூட, இப்பொழுது இருப்பவர்களே அதற்கான அத்திவாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எனவே நாடாளுமன்றம்தான் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க வேண்டும். நான் அதற்காக முற்று முழுதாக ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறேன். – என்றார்.

## ஓமந்தையில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், தமது காணாமல் போன உறவினர்களை ஒப்படைக்குமாறும், அரசு நீதியை தர வேண்டும் எனவும், 'ஓ.எம்.பி.' வேண்டாம் எனவும் கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் எக்நெலிகொடவின் பாரியார் எக்நெலிகொட சந்தியாவும் கலந்து கொண்டிருந்தார். ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

காணாமல் ஆக்கப்பட்டர்களைத் தேடும் போராட்ட காலத்தில் மரணித்த 53 உறவுகளுக்குமான நினைவுமலர் ஒன்றும் இதன்போது வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவுகளால் ஐநா.மனித உரிமைகள் பேரவைக்கு கையளிக்குமாறு மகஜர் ஒன்று அருட்தந்தை ஜோசப் அந்தோனிப்பிள்ளை யேசுதாஸிடம் கையளிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி. சிறிதரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ப.சத்தியலிங்கம், ப.தியாகராஜா, இ.இந்திரராஜா, தமிழ் மக்கள் கூட்டணி உட்பட பல அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## தமிழருக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் பதிலை எதிர்பார்க்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' வேலைத்திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார். இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு ஜனாதிபதி முன்னிலையில் உரையாற்றும் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இங்கு ஆளுநர் சொன்னதைப் போல தன்னுடைய ஜனாதிபதிப் பதவிக் காலத்திலே பத்து தடவைகளுக்குக் கூடுதலாக யாழ்ப்பாணத்திற்கு இந்த ஜனாதிபதி வருகை தந்திருக்கின்றார்.

எங்கள் நாட்டின் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தடவைகளை எண்ணிப் பார்க்கின்றபோது ஒரு மாறுதலான, வித்தியாசமான, பெருமைப்படக் கூடிய ஒரு சாதனை என்று இதனைச் சொல்ல வேண்டும். அதற்கு முக்கியமான காரணமொன்று இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலிலே அவர் வேட்பாளராக நிற்கின்ற போது மிககுறுகிய காலத்திலேதான் அவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பதாகத் தான் வேட்பாளராக வருவாரென்று அவருக்கே தெரிந்திருக்காது. ஆனால் சில காரணங்களின் நிமித்தமாக அவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதென்ற முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு எடுக்கப்பட்டமைக்கு நாங்களும் காரணிகளாக இருந்திருக்கிறோம் என்பது ஜனாதிபதிக்குத் தெரியும்.

அப்படியாக எடுக்கப்பட்ட முடிவோடு இணங்கி நாங்கள் செயற்பட்டோம்.

அவருடைய தேர்தல் பிரச்சாரத்தின் போது அவர் பல வாக்குறுதிகளை அளித்தார். நாட்டு மக்களை ஒன்றிணைப்பேன், திரும்பவும் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவேன், என்னிடத்திலே இருக்கின்ற அதிகாரங்களை நான் மீளக் கொடுப்பேன் என்கின்ற வித்தியாசமான பல வாக்குறுதிகளை அவர் கொடுத்திருந்தார்.

அவருக்கு வாக்களித்த மக்களிலே – விசேடமாகத் தமிழ்ப் பேசுகின்ற மக்களை எடுத்துக் கொண்டால் – தமிழ், முஸ்லீம் மக்களின் வாக்குகளில் 85 சத வீதத்திற்கு கூடுதலான வாக்குகளை அவர் பெற்றிருந்தார்.

நாட்டிலே பெரும்பான்மையாக வாழ்கின்ற சிங்கள மக்களுடைய வாக்குகளையும் பெற்று மற்றைய மக்களுடைய வாக்குகளையும் பெருமளவில் பெற்றதன் காரணமாக அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவ்வாறு ஜனாதிபதியாக பதவியேற்று முதல் தடவையாக ஜனாதிபதியாக யாழ்ப்பாணத்திற்கு அவர் வந்த போது எங்களுடைய கட்சியின் தலைவர் அண்ணன் மாவை சேனாதிராசா யாழ்ப்பாணக் கச்சேரியில் வைத்து அவருக்கு ஒரு விடயத்தை ஞாபகமூட்டினார். அவர் சொன்ன அந்தச் செய்தியை நான் இங்கு திரும்பவும் ஞாபகப்படுத்துகிறேன்.

*'எங்களிடத்திலே ஓர் இணக்கப்பாடு இருக்கிறது. அது மையினாலே எழுதப்பட்டதல்ல. ஆனால் ஓர் இணக்கப்பாடு இருக்கின்றது'* – என்று மாவை அண்ணன் சொன்ன போது அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி *'ஆம். ஓர் இணக்கப்பாடு இருக்கிறது.'* – என்று சொன்னார்.

அதாவது *'ஓர் இணக்கப்பாடு எங்களிடையே இருக்கிறது. அது எழுத்திலே அல்ல. எங்களுடைய இதயங்களிலே இருக்கிறது'* – என்று ஜனாதிபதி பதில் சொல்லியிருந்தார்.

அப்படியான ஒரு நம்பிக்கையோடு நாங்கள் இந்த நான்கு வருடங்கள் பயணித்திருக்கின்றோம். இதிலே முழுமையான வெற்றி எங்களுக்குக் கிடைத்திருக்காவிட்டாலும் பல மைல் தூரம் நாங்கள் சேர்ந்து நடந்து வந்திருக்கிறோம். முழுமையான வெற்றி கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் எங்களுடைய மக்களிடத்தே இருக்கின்றது. ஒரு குறுகிய கால இடைவெளி இன்னமும் இருக்கின்ற போது கூட அதிலேயும் நீங்கள் எங்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை இன்னமும் எங்களிடத்தே சிலருக்கு இருக்கிறது.

எங்களுடைய மக்களின் மன நிலையில் ஆழமாகப் பதிந்திருக்கிற இந்த ஆதங்கத்தை உங்கள் முன்பாக வைத்து உங்களை பதிலை எதிர்பார்க்கிறேன். – என்றார்.

# நல்லூரில் நேற்றுத் தீர்த்தம்







யாழ்ப்பாணம், ஓக. 31

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை சிறப்புற இடம்பெற்றது.

காலை 6 மணியளவில் ஆரம்பமான சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து பிள்ளையார் மற்றும் வள்ளி, தெய்வானை, சமேதரராய் நல்லூரான் காலை 7 மணிக்கு ஆலய தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடி பக்தர்களுக்கு அருள்காட்சி அளித்தார். நல்லூரானுடன், சண்டேஸ்வரர் மற்றும் எட்டுத் திக்கு தேவர்களும் வீதியுலா வந்தனர்.

தீர்த்த திருவிழாவுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் , வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் வருகை தந்து கலந்து கொண்டிருந்தனர். அதேவேளை ஆயிரக் கணக்கான அடியவர்கள் அங்க பிரதட்சணம் செய்தும், நூற்றுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் முருகப் பெருமானை வழிபட்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2019 இல் வெளியிடப்பெற்றது.